**செய்தி வெளியீடு எண்: 548** **நாள்: 07.09.2011**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (7.9.2011) தலைமைச் செயலகத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், உள்ளகரம் புழுதிவாக்கம் நகராட்சியில் 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு இடைவெளி ஈடு செய்யும் நிதி உதவியுடன் 7040 சதுரடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள “பாரத் ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். மாளிகை” அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) திறந்து வைத்தார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், உள்ளகரம் புழுதிவாக்கம் நகராட்சியில் 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு இடைவெளி ஈடு செய்யும் நிதி உதவியுடன் 7040 சதுரடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள “பாரத் ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். மாளிகை” அலுவலகக் கட்டடம் கூடுதல் பரப்பளவிலான துறைவாரியான அலுவலக அறைகள், மன்றக் கூட்ட அரங்கம், பார்வையாளர்கள் மற்றும் பொது மக்கள் அமரும் அறைகள் உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

**வெளியீடு:** ஆணையர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 7.9.2011